அ.வ.எண். 15/2016 நாள்: 04.02.2026

பி.சா.1 திரு.சிவப்பிரகாசம்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வாதியை தெரியுமா என்றால் தெரியும், பக்கத்துவீட்டுக்காரர் 20 ஆண்டுகளாக தெரியும். வழக்கு சொத்து தற்போது என்னவாக உள்ளது என்றால் வீடாக உள்ளது. இந்த வழக்கில் 2 இன சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தாக 1 வது இனம் சந்து பகுதியாகவும், 2 வது இனம் வாதிக்கு பாத்தியப்பட்ட இடமாகவும் குறிப்பிட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சந்து பகுதியில் எங்களது வீடும், குளியலறையும் கட்டப்பட்டுள்ளது என்றால் எனது தகப்பனார் வாங்கிய இடத்தில்தான் கட்டியுள்ளோம்.

2) நாங்கள் வீடு கட்டி எத்தனை வருடம் ஆகிறது என்றால் 10 வருடத்திற்குள் இருக்கும். நாங்கள் வீடு கட்டுவதற்கு முன்பு வழக்கு சொத்து என்னவாக இருந்தது என்றால் அரசாங்கம் கொடுத்த தொகுப்பு வீடு இருந்தது. மேற்படி தொகுப்பு வீட்டை இடித்துவிட்டு அதில் நாங்கள் புதிதாக வீடு கட்டியுள்ளோம் என்றால் ஆமாம். மேற்படி தொகுப்பு வீடு 2 ¼ சதுரம் என்றால் சரிதான். தற்போது கட்டியுள்ள வீடு எவ்வளவு சதுரம் இருக்கும் என்றால் 8 சதுரம் ஆகும். வாதி தற்போது எங்கு குடியிருக்கிறார் என்றால் ஈச்சங்குடி மெயின்ரோட்டில் குடியிருக்கிறார். வழக்கு சொத்தில் வாதி ஏற்கனவே குடியிருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது, அங்கு பஞ்சாயத்து பள்ளிகூடம் இருந்ததாக எனது அப்பா சொல்லி தெரியும்.

3) எனது வீட்டிற்கு அருகில் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலம் உள்ளதா என்றால் ஆமாம். எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கு தாக்கல் செய்தபிறகு பெறப்பட்டது என்றால் சரிதான். வாதிக்கு ஏற்படுத்தப்பட்ட செட்டில்மென்ட் ஆவணம் (வா.சா.ஆ.1) அடிப்படையில் உரிமை கோருகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை எத்தனை முறை சர்வேயர் மூலம் நிலஅளவை செய்தேன் என்றால் 2 முறை செய்தேன். நிலஅளவை செய்ய யார் மனு கொடுத்தது என்றால் நான்தான் கொடுத்தேன். நிலத்தை அளக்க மனு

கொடுத்தது அதற்கான ரசீது ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை.

வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

S.d/ Sivaprakasham

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.02.04 16:59:05 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU